கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

மார்கழி 2005 1974 டிசம்பர்

30
காசு

அறிவியல்
வரலாற்றுத்
திங்களிதழ்

தபால் நிலைய சேமிப்பு பாங்க்

2-வது பரிசுக் குலுக்கல் : 1975 ஜனவரி இறுதியில்
பரிசுகளின் மதிப்பு: ரூ. 20,50,000
11,116 பரிசுகள்

உங்களுடைய தபால் நிலைய சேவிங்ஸ் பாங்க் கணக்கில் 1974 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை நீங்கள் 200 ரூபாய்க்குக் குறையாமல் பணம் வைத்திருந்தால் உங்களுக்கு இந்தக் குலுக்கலில் இடம் உண்டு.

உங்களுடைய தபால் நிலையத்தில் இந்தக் குலுக்கலுக்கான 'கோட்' எண் பட்டியல் ஒன்று இப்போது இருக்கும். அதில் உங்களுடைய கணக்குக்கான 'கோட்' எண் இருக்கிறதா என்று கவனியுங்கள்.

பட்டியலில் உங்களுடைய கணக்குக்கான எண் இல்லாவிடில் போஸ்ட் மாஸ்டரிடம் டிசம்பர் 31-ம் தேதிக்கு முன் தெரிவியுங்கள்.

தேசிய சேமிப்புக் கமிஷனர்

த. பெ. எண் 96, நாக்பூர்.

தேசிய சேமிப்பு நிறுவனம்

davp 74/53

உயிரிகள் உடலைப் பாதுகாப்பது யாங்ஙனம்?

நா. எழில்-மகிழ்நன்

உலகில் வாழுகின்ற எல்லா உயிரிகளும் தந்தம் வாழும் சூழல் களுக்கேற்ப தங்களைப் பாதுகாத்து, உயிர்த்திருக்கின்றன. அவ்வவ் விடங்களிலுள்ள இயற்கைச் சூழல்களுக்கேற்ப, அவ்வவ்வற்றின் உடலின்மீது உறைகள் (C \e'ji) பொறுத்தப்பட்டாற் போன்ற அமைப்பு அமைந்து விடுகின்றன. உடல் உறைகள் வெப்பம், குளிர் போன்ற நிலைகளைத் தாங்க இயலவில்லையெனின் அவை வாழிடத்தை இயல்பாக மாற்றிக் கொள்கின்றன. குளிர் அல்லது வெப்ப காலங்களில் சில பறவைகள் சில இடங்களில் வாழயியலாது இடம் பெயருவதற்கு அடிப்படைக் கரணியம் இதுவேயாம். ஆனல் கரடி போன்ற சில நிலவாழ் உயிரிகள் (Land a...a) பறவைகளே போல் எளிதில் இடம் பெயருதல் சாலாது. ஆகவே. அவற்றின் உடற் கூறுகளுக்கு ஒவ்வாத சூழலிருப்பின், காலத்தைத் தூங்குவது போன்ற ஒய்வுச் செயல்களில் ஈடுபடுத்தி வாழும்.

முள்ளெலி (I-dgehog), முள்ளம் பன்றி ('orcupine) போன்ற உயிரிகள் மீது முள்போன்ற மயிர்கள் வளருகின்றன. இம்முட்கள் கொடிய சில உயிரிகளிடமிருந்து தம்மைப் பெரிதும் காப்பாற்றிக் கொள்ளப் பயன்படுகின்றன. எதிரிகளை அச்சுறுத்த தம் உடம் பிலுள்ள முட்களைச் சிலிர்த்துக் காட்டும். இயல்பான பொழுதில் அம்முட்கள் உடலுடன் ஒட்டியிருக்கின்றன.

முள்ளெலியின்மீது ஊசிபோன்ற மயிர்களிருக்கும். பிறக்கும் போது மயிரில்லாது, பின்னரே வெண் மயிர்கள் முளைத்து, அவை கடினமாகின்றன. முள்ளெலி, ஐரோப்பியாவிலும், ஆசியாவிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் காணப்படும் முள்ளெலி குளிர்காலத்தில் உணவு தேடாது உறங்கும் இயல்பு டையது

முள்ளம் பன்றி உடலிலுள்ள முள், குழாய் போன்றிருக்கும். நுனி வெண்மையாக இருக்கும். நீளம் 6 விரற்கிடை முதல் 12 விரற்கிடை வரை இருக்கும். முள் ஒடிந்து போனால், அதே இடத் தில் வேறொரு முள். புதிதாக முளைக்கும்.

சில உயிரிகளுக்கான உறைகள் எதிரிகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் பயன்படுகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக யாமையைக் கொள்ளலாம்.

யானை போன்ற விலங்குகிளின் தோல் தடித்திருப்பதால். அதுவே அதற்குப் பாதுகாப்பாக உள்ளது. சின்னஞ் சிறு புழுப் பூச்சிகள் அதனைக் கடித்துத் தொல்லைப் படுத்த இயலாது. மேலும் பாம்பு கூட அதனைக் கடிப்பது கடினமே

குளிர் காலத்தில் மலைவாழ் ஆடுகள் (Mountain goats) உடலில் மிகுதியும் வெண்மையான மயிர்கள் வளருகின்றன. வெப்பக் காலம் வந்ததும் தானே அம் மயிர்கள் வீழ்ந்து படுகின்றன.

பாலூட்டி (Mammal)களின் உடல்கள் தேவையான அளவு மயிர்களால் போர்த்தப் பட்டிருக்கின்றன. அவற்றின் உடல் உறையாகிய ,மயிர்கள், அவை வாழிடங்களுக்கேற்ப மாறு தலடைந்து காணப்படுகிறது. குரங்கு வகைகளை எடுத்துக் கொண்டால், அதனுடைய முதுகுப் புறத்தில் மிகையான மயிர் களும், நெஞ்சுப் பகுதியில் குறைந்த மயிர்களும் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படைக் கரணியமென்னவெனில், அவை குனிந்து செல்லும் இயல்புள்ளதனால், கதிரவன் வெப்பம், மழை முதலியன அவற்றின் முதுகுப்புறத்தைத்தான் தாக்குகின்றன. முதுகுப் பகுதி யில் மயிர்கள் மிகுந்திருப்பதனால் அவற்றின் உடல்கள் பாதிக்கப் படுவதில்லை.

வாலில்லாக் குரங்கின் (Ape) முழங்கைக்குக் கீழே வளரும் மயிர்கள் செங்குத்தாக முளைக்கின்றன. அக்குரங்குகள் மழையில் நனையும்போது, நீர் முன்கையில் தங்காது வழிந்தோடி விடுகின்றது அதனால் அவை மழை பொழியும் போது கூடச் சிறிதளவும் வழுக் காது. உயர்ந்த மரங்களில் கூட ஏறி விடும்.

நில முனைக் கோடியில் வாழும் கரடி (Polar bear) களின் உடல் மெல்லிய மயிர்களால் அடர்த்தியாகப் போர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் அக்கரடி, பனிப் பாறைகளின் மீது குளிர்ச்சி உணர்வு எள்ளளவுமின்றிப் படுத்துறங்கும். கரடியின் பெயரை பழைய நூல்கள் எண்கு, உளியம் என்றே குறிக்கின்றன.

கீரியும் பாம்பும் சண்டையிடும் போது, கீரியைப் பாம்பு கடித் தால் கீரியானது ஒரு வகை மருந்துத் தழை மீது, படுத்துருண்டு நஞ்சைப் போக்கிக் கொள்ளும் என்பது ஒரு வழுவான எண்ண மாகும். கீரியின் உடல் மீது மிகவும் அடர்த்தியான மயிருள்ளது. பாம்பு கடித்தால் அதன் அடர்த்தியான மயிரைத் தாண்டித்தான் பாம்பின் நச்சுப் பல் சென்று நஞ்சைப்பாய்ச்ச வேண்டும். அஃது அவ்வளவு எளிதன்று. பாம்பை விடக் கீரியானது வலுவிலும் சுறு சுறுப்பிலும் மிககதாகையால். பாம்பு கடிக்க முயலுமுன்பே அதன் தலையைக் கீரி கடித்தெறிந்து விடும்.

குன்னத்தூர்

மா. சந்திரமூர்த்தி எம்.ஏ.
பழங்கலை பதிவு அலுவலர், மதுரை.

மதுரையில் இருந்து சிவ கங்கை செல்லும் சாலையில் 10-கல் தொலைவில் வரிச்சியூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூருக்கு தெற்கே 1-கல் தொலைவில் குன்னத்தூர் என்னும் சிற்றூர் உண்டு.

இவ்வூரில் அமைந்துள்ள மலையை 'குன்னத்தூர் மலை' என்றும் 'உதயகிரி மலை' என்றும் அழைக்கின்றனர். இம்மலை 232-1 சர்வே எண்ணில் சுமார் 1066. 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இம்மலை மூன்று பிரிவாகக் காணப்படுகிறது. முதல் மலையிலும், நடு மலையிலும் கோயில்கள் உள்ளன. இம் மலையில் இயற்கையாக அமைந்த குகைத்தளம் ஒன்றும், குடைவரைக் கோயில்கள் மூன்றும் உள்ளன.

இயற்கையாக அமைந்த குகைத்தளத்தில் பல சமணப் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பாறையின் மேல் முகப்பில் தமிழ் கல்வெட்டுகள் காணப்படுகிறது. இக்கல்வெட்டுகள் இடையிடையே சிதைந்துள்ளன. இக்கல்வெட்டுகளை திரு. இரா. நாகசாமி அவர்கள்,

1. ....பணிய் கொடுபி

2. ...டா.........இதா (வை)னுற காலனே

எனப் படித்துள்ளார்கள்.

இக்குகைத்தளத்தின் பின்பகுதியில் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்ட ஒன்று இவ்விறைவன் உலகநாதர் என அழைக்கப்படுகிறார். இங்கு ஒரு அழகிய கரிய கஞ்சுகனான பைரவரின் கற்சிலை உள்ளது. இது கிபி. 12-13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பமாகும். இங்கு சில சாதுக்கள் தங்கி உள்ளனர்.

முதல் குடைவரை :-

இது உதயகிரியின் கிழக்கு திசையில் அமைந்துள்ள. குடைவரையின் வாயில் கிழக்கு நோக்கி உள்ளது. இறைவன் உதயகிரீசுவரர் என அழைக்கப்படுகிறார். காலையில் கதிரவன் உதயமாகும் பொழுதும் கதிரவனின் ஒளிக்கதிர்கள் லிங்கத்தின்

மேல் விழுகின்றன. இவ்விறைவன் பெயராலே இம்மலை 'உதயகிரி' என அழைக்கப்படுகிறது.

கருவறை சதுரமாக (2. 60 மீட்டர் நீளம் × 2. 60 மீட்டர் அகலம்) அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் உயரம் 1. 95 மீட்டர். கருவறைக்குச் செல்லும் வாயில் 68 செ. மீட்டர் அகலத்தில் காணப்படுகிறது. கருவறையின் நடுவில் பாறையிலேயே செதுக்கப்பட்ட சிவலிங்கம் 4 ' உயரத்தில் உள்ளது. இதன் பீடம் சதுரமான (1. 20மீ × 1. 20மீ) அமைப்புடையது. ருத்திர பாகத்தில் பிரம்ம சூத்திரம் காணப்படவில்லை. இக்குடைவரை கருவறையும் எளிமையான மண்டபத்தையும் கொண்டு விளங்குகிறது.

வாயிற்காப்போர் :-

கருவறை வாயிலில் இரண்டு வாயிற்காப்போரின் (துவாரபாலகர்) அழகிய புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. தென் பகுதியில் உள்ள உருவம் நின்ற நிலையில் இரு கால்களையும் பின்னிக் கொண்டு இருகைகளையும் அரவம் சுற்றிய கைத்தண்டின் (கதை ஆயுதம்) மேல் ஊன்றி காணப்படுகிறது. சுமார் 6' உயரம் உள்ள இவ்வுருவத்தின் தலையில் மகுடமும், காதில் குண்டலமும், கழுத்தில் பட்டையான கழுத்தணியும், தோளில் அனந்தவளையும் அணி செய்கின்றன. வடபகுதியில் உள்ள மாடத்தில் செதுக்கப்பட்டுள்ளன. மற்றொரு உருவம் இருகைகளையும் மார்போடணைத்து காணப்படுகிறது. இவ்வாயிற்காப்போனின் அருகில் கதை ஆயுதம் காணப்படவில்லை. சுமார் 6 உயரமுள்ள வாயிற்காப்போனின் முகம் மட்டும் சிதைந்துள்ளது.

பிள்ளையார் :-

இக்குடைவரை முகமண்டபத்தின் வடக்குச் சுவரில் ஒரு பிள்ளையாரின் புடைப்புச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இதன் முடியை கரண்ட மகுடம் அணி செய்கிறது. பிள்ளையாரின் இரண்டு கைகளிலும் ஆயுதங்கள் காணப்படவில்லை. இச்சிற்பம் முற்றுப்பெறவில்லை. இக்குடைவரை முகமண்டபத்தில் ஒரு அழகிய நந்தியின் தனி உருவமும் காணப்படுகிறது.

இரண்டாம் குடைவரை :-

இக்குடைவரையில் வாயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இறைவன் 'அஸ்தகிரீசுவரர்' என்றும் குடைவரை 'அஸ்தகிரீசுவரர் கோயில்' எனறும் அழைக்கப்படுகிறது. குடைவரை மிகவும்

எளிமையான அமைப்புடையது. கருவறை வடக்கு தெற்காக 2.75 மீட்டரும் கிழக்கு மேற்காக 2.50 மீட்டரும் அமைந்துள்ளது. கருவறை 1.90 மீட்டர் உயரம் நடுவே உள்ள லிங்கம் 75 செ.மீ உயரமும் காணப்படுகிறது. லிங்கத்தின் பீடம் சதுரமான (1.1மீ × 1.1மீ) அமைப்புடையது.

இந்த லிங்கத்தின் மேல் கதிரவன் மறையும்பொழுது அதன் ஒளிக்கதிர்கள் விழுகின்றன. இக்குடைவரையில் சிற்பங்கள் ஏதும் செதுக்கப்படவில்லை. குடைவரையின் வெளியில் நந்தியின் உருவம் ஒன்று தனித்து காணப்படுகிறது.

மூன்றாம் குடைவரை :-

இக்குடைவரை மலையின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இது கருவறையும் முகமண்டபத்தையும் உடையது. குடைவரை நீலகண்டேசுவரர் கோயில் என அழைக்கப்படுகிறது. கருவறையில் சிவலிங்கம் பாறையிலே குடைந்து காணப்படுகிறது. லிங்கத்தின் பீடமும், ருத்திரபாகமும் முன்னதுபோன்ற அமைப்புடையது.

வாயிற்காப்போர் :-

கருவறை வாயில் இருமருங்கிலும் இரண்டு வாயிற்காப்போர் சிலை புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளன. தென்புறம் உள்ளது, நின்ற நிலையில் இருகைகள் கொண்டு விளங்குகின்றன. இரண்டு கைகளையும் அரவம் சுற்றி அத்தண்டின் மேல ஊன்றி உள்ளது. இதன் முடியில் மகுடம், காதில் வட்ட குண்டலம் இடையில் ஆடை இடுப்பு வார் (கடிபந்தம்) அணிச்செய் கின்றன. வடபுறத்தில் உள்ள வாயிற்காப்போரின் சிலை எளிமையான அமைப்புடையது. இவ்வுருவத்தின் இடது கையில் மலர்கொத்து தாங்கி காணப்படுவது சிறப்பாகும். இவ்வுருவத்தின் அருகில் முதல் குடைவரைச் சிற்பத்தைப் போன்று கைத்தண்டு (கதை ஆயுதம்) காணப்படவில்லை.

பிள்ளையார் ;-

இக்குடைவரை முகமண்டபத்தின் தென்புற மாடத்தில் பிள்ளையாரின் உருவம் ஒன்று புடைப்புச் சிற்பமாக செதுக்கப் பட்டுள்ளது. இவர் நான்கு கைகளோடு வீராசனத்தில் காணப் படுகிறார். பிள்ளையாரின் பின்னிரு கைகளில் பாசமும், அங்குசமும் உள்ளன. இச்சிற்பம் முதல் குடைவரை பிள்ளையாரைவிட

அழகிலும் அமைப்பிலும் சிறந்து விளங்குகிறது. இது குன்றக்குடி பிள்ளையாரைப்போன்ற அமைப்புடையது.

இக்குடைவரையில் தென் பாகத்தில் உள்ள நீண்ட பாறையில் 6' உயரத்தில் செவ்வக வடிவாக குடையப்பட்ட ஒரு பகுதி உண்டு. பிராமி, வைஷ்ணவி, மாகேசுவரி, கௌமாரி, இந்திராணி, சாமுண்டி ஆகிய கன்னியர் எழுவரின் உருவங்கள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இவை பெரும்பாலும் இடதுகாலை மடித்து வலது காலை கீழே தொங்கவிட்டு அமைர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் இரண்டு கைகளை மட்டும் கொண்டுள்ளன. கைகளில் ஆயுதங்கள் காணப்படவில்லை. பெரும்பாலும் இச்சிற்பங்களின் வலது கை கடக முத்திரையிலும் இடது கை தொடையின் மீதும் அமைந்து காணப்படுகின்றன. மற்றும் சில சிற்பங்கள் வலது கையை முழங்கால் மேல் கடக முத்திரை கொண்டும் இடது கையை தொடையின் மீது கொண்டும் விளங்குகின்றன. இச்சிற்பங்கள் இராஜாக்கள்மங்கலம் சப்தமாதர் சிற்பங்களை போன்ற கலையமைதியுடையன. இவ்வூரார் இதனை 61 பிள்ளைக்காரி கோயில் 'ஸ்ரீ சப்தரிசிகள் மண்டபம்' என குறிக்கின்றனர், இவை அனைத்தும் கன்னியர் எழுவருக்காக எடுக்கப்பட்ட பாண்டியர் கால பணியாகும்.

காலம் ;-

இக்குடைவரைப் பகுதியில் கல்வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. ஆதலில் இதன் காலத்தை, குடைவரை அமைப்பையும் சிற்ப அமைதியையும் கொணடுதான் கணிக்க வேண்டும். இவ்வூருக்கு அருகில் ஆனைமலையில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட குடைவரை உள்ளது. மற்றும் திருப்பரங்குன்றத்தில் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட குடைவரை உள்ளது. இவற்றோடு குன்னத்தூர் குடைவரையையும் சிற்பங்கனை ஒப்பிடும்பொழுது இவை கி. பி 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கால பணி என கருதலாம்.

பாதுகாப்பு :-

கலைச்சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் இணைந்து விளக்கும் குன்னத்தூர் குடைவரை தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பாதுகாப்பில் உள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

ஓரை

செங்கைப் பொதுவன்

சங்க காலத்து மகளிர் விளையாடிய விளையாட்டுகளுள் 'ஓரை' என்பதும் ஒன்று. இது நீரில் விளையாடும் விளையாட்டு என்றும் இக் காலத்தில் 'ஓரி' என்னும் பெயருடன் விளையாடப் படுவதாகவும் புலவர் முத்து. எத்திராசன், அவர்கள் கொங்கு (தேனடை 4, தேனீ 10) இதழில் எழுதியிருந்தார். என்னை ஆராயத் தூண்டிய அவரது கட்டுரைக்குப் பாராட்டுகள். சங்க காலத்து ஓரை ஆட்டம் உண்மையில் நீர் விளையாட்டு அன்று. மணற் பரப்பில் விளையாடும் ஆட்டப் பாங்கின் நிலைகளில் ஒன்று.

ஓரை விளையாடிக் கொண்டிருந்த மகளிரின் கூந்தலிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது என்னும் குறிப்புகள் உள்ளன. (நற். 398, குறுந். 401). 'ஓரை ஆடாது இல்லத்தில் இருத்தல் நல்லதன்று; பொங்கிவரும் புதுநீரில் ஆடுவோம் வா' என்று தன் தோழியை ஒருத்தி அழைப்பதாக நற்றிணைப்பாடல் 68 தெரிவிக் கிறது. இவற்றை எண்ணிப் பார்க்கும்போது ஓரை விளையாட்டு நீரில் ஆடும் ஆட்டம் என்று எண்ணத் தோன்றும்.

புதிதாகக் கொண்டுவந்து பரப்பப்பட்ட மணல் முற்றத்தில் மகளிர் ஓரை ஆடினர். (நற். 143), ஓரை ஆயத்து மகளிர் சேற்று மண்ணைக் கிண்டிக் கிளறிக் கொண்டு விளையாடுதலும் உண்டு. (புறநா. 176). வாடைக் காற்றால் மேடிட்ட மணற்பரப்பின்மீது வண்டல் விளையாட்டும் ஓரை விளையாட்டும் நடைபெற்றன. (அகநா. 60). இந்த விளையாட்டின்போது பூந்தாதுகளைக் கொண்டு பாவை செய்து விளையாடலும் உண்டு. (குறுந். 48). ஓரை விளையாடும்போது சிலம்பொலி கேட்கும். (அகநா. 49). ஓரை ஆயத்தார் பந்து விளையாடுதலும் உண்டு. (அகநா. 219). ஓரை விளையாட்டு குடியிருப்பு வீட்டில் அல்லது வீட்டு முற்றத்தில் நடைபெறும். (அகநா. 49). இந்தக் கருத்துகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது ஓரை விளையாட்டு நீரில் மூழ்கி விளையாடும் ஆட்டம் அன்று என்பது தெளிவாகிறது.

ஓரை ஆடும் மகளிர் வயலில் பூத்திருந்த நெய்தல், ஆம்பல் பூக்களைப் பறித்துக் கொண்டுவர ஓடினர். (கலி. 75). நீரின் அலையால் பின்புறக் கூந்தல் கலைந்துபோய் நீர் வடியலாயிற்று. (நற். 398). கடற்கரை மணலில் மகளிர் ஓரையாடினர். (அகநா. 60, குறுந். 48). இந்தக் குறிப்புகளையெல்லாம் பார்க்கும்போது விளையாடிய மகளிரின் கூந்தல் நனைந்தமைக்குரிய காரணம் புலனாகிறது. நீரலை கூந்தலில் படும்படி அவர்கள் கடற்கரை

மணலில் விளையாடியிருக்க வேண்டும். அல்லது மணலில் ஓரை விளையாடி முடிந்தபின் அவர்கள் தூய்மைக்காக நீராடியிருக்க வேண்டும்.

வீட்டில் சிலம்பொலி கேட்க விளையாடினர். (அகநா. 49). புதுமணல் பரப்பிய முற்றத்தில் விளையாடினர். (நற். 143). இந்தக் குறிப்புகள் தலையில் நீர் படாமலும் இந்த விளையாட்டு நடைபெற்றமையைக் காட்டும் சான்றுகள்.

வண்டற்பாவை செய்து விளையாடிய விளையாட்டும் ஓரை விளையாட்டும் ஒரே தொடர்ச்சியாக நடைபெற்ற விளையாட்டுகள் (அகநா. 60, குறுந். 48). ஓரையாடலும் நீராடலும் அடுத் தடுத்து நடைபெற்ற விளையாட்டுகள் (நற். 68). வண்டல் விளையாடலும், புனல் விளையாடலும் அடுத்தடுத்து நிகழ்ந்த ஆட்டங்கள் (பெரும்பாண். 311). இவற்றை எண்ணும்போது ஓரை, வண்டல் விளையாட்டுகளை ஆடித் திளைத்தவர் இறுதியில் நீராடி உடலைத் தூய்மை செய்துகொண்டு மீண்டனர் என்பது தெளிவாகிறது. ஓரை விளையாடிய மகளிரின் கூந்தலில் நீர் வடிந் ததற்கு இதுவும் காரணமாகலாம்.

ஓரை விளையாட்டு எப்படி நடைபெற்றது?

> "ஊதை ஊட்டிய உயர்மணல் அடைகரை
> கோதை ஆயமொடு வண்டல் தைஇ
> ஓரை ஆடினும்"
>
> — அகநா. 60.

> "வண்டல் தைஇயும் வருதிரை உதைத்தும்"

என்னும் அடிகளில் காணப்படும் ஒப்புமை ஓரை விளையாட்டு என்பது நீரலையைக் காலால் உதைத்து விளையாடும் விளையாட்டோ என்று எண்ண வைக்கிறது. (ஓதம் நீரலை. ஓதம் ஓதை - ஓரை) கடற்கரை மணலில் நீரைக் காலால் உதைத்து விளையாடும் விளையாட்டும் வீட்டில் பரப்பப்பட்ட புதுமணலில் எப்படி நடைபெற்றிருக்கும்? ஒருவேளை வண்டல் விளையாட்டில் கட்டிய மணல் வீட்டைக் காலால் தாமே அழிக்கும் விளையாட்டாக அமைந்திருக்கலாம் என்று எண்ண வேண்டியுள்ளது.

முதலில் வண்டல். பின் பாவை. அதன் பின் பூப்பறித்துச் சூட்டுதல். அடுத்து ஓரை. இறுதியில் நீராடல் என்ற முறையில்

மகளிர் விளையாட்டுகள் அமைந்திருந்தன எனலால். ஒவ்வொரு விளையாட்டிலும் குரவை ஒலி எழுப்படும் (கலி. 75 அகநா. 269)

ஓரை ஆட்டம் எவ்வாறு இருந்தது என்பதைத் தெளிவாக விளக்கப் போதுமான சான்று கிடைக்கவில்லை. எனினும் ஓரை என்பது விளையாடுவோர் நிலைகொண்டுள்ள அமைப்பாகும் என்பது தெளிவாகிறது. இந்த அமைப்பு நேர் வரிசை என்பதும், அந்த நேர்வரிசை கலையாமல் நகர்ந்து இந்த ஆட்டம் ஆடப் பட்டது என்பதும்

'செல்வுழி செல்வுழி
மெய்ந்நிழல் போல
கோதை ஆயமோடு
ஓரை தழீஇத்
தோடமை அரிச்சிலம்பு ஒலிப்ப
அவள் ஆடுவழி'

(அகநா. 49)

என்னும் பகுதியால் உணரலாம். வண்டல் ஆட்டம் வட்டமாக நின்று ஆடப்பட்டது. ஓரை ஆட்டம் நேர்வரிசையில் நின்று ஆடப்பட்டது. இலக்கியத்தில் கிடைக்கும் சான்றுகளால் தெளிவாகும் உண்மை இவையே. பிறவாறு கூறுதல் அவரவர் உய்த் துணர்வே.

இந்த விளையாட்டில் பெண்களுடன் ஆண்கள் கலந்துகொண்டு விளையாடலும் உண்டு எனலாம். (நற். 155, கலி. 82).

மேலும் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன

—ஆசிரியர்.

"பூத்த கரும்பும் காய்த்த நெல்லும்"

நவம்பர் இதழில், இத்தலைப்பில் வந்த கட்டுரைத் தொடக் கத்தில் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்'' என்று இருப்பதற்குப் பதிலாக 'ஓரம் போகியார்' என்று இருக்கவேண்டும். பிழையைச் சுட்டிக் காட்டிய வாசகர்களுக்கு நன்று. கட்டுரை ஆசிரியரும், பிழையைத் தானே கண்டு பிகுத்து கடிதம் எழுதியுள்ளார்.

—ஆசிரியர்

அல்கலாய்டுகள் (Alkaloids)

உயிரினங்கள் அனைத்திற்கும் அடிப்படை உணவாக அமைவது தாவர இனமே. எல்லா உயிரினங்களும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தாவர உலகினை அண்டி வாழ்கின்றன. குறிப்பாக மனிதர்கள் தாவரங்களை அதிக அளவில் பயன்படுத்து கின்றனர். உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளுககாக தாவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இம் மூன்று தேவைகளுக்கு மட்டுமின்றி உடல்நலம் சீர்கெட்ட நிலையில் மருந்துகளாகவும் தாவரங்கள் உதவுகின்றன. மேலும் மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியினையும் திசைப்படுத்தும் திறன் தாவரங்களுக்கு உண்டு. தாவரங்களின் வளர்சிதை (netab lic) மாற்றங்களின் விளைவாக அவற்றில் உருவாகும் பல பொருள்களை மனிதன் பயன்படுத்த கற்றுக் கொண்டுள்ளான். இத்தகைய பொருள்களில் அல்கலாய்டுகள் (alkaloids), தாவர இனத்திற்கே, சிறப்பானவைகளாகும்.

அல்கலாய்டுகள் தாவர இனத்திற்கே சிறப்பானவைகளாக இருந்தபோதிலும் எல்லா தாவரங்களிலும் காணப்படுவதில்லை. இவை காரதன்மை (lkaline) அமிலத் தன்மையுடைய வேதியியல் பொருட்களாகும். இவற்றினால் தாவரங்களுக்கு என்ன பயன் என்பது பற்றி திட்டவட்டமான கருத்து உருவாகவில்லை. ஆனால் மனிதனுக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன, அன்றாட வாழ்வில் வெவ்வேறு நிலைகளில் பல்வேறு முறைகளில் அல்கலாய்டுகளை நாம் பயன்படுத்துகிறோம். குடிமநீர்கள், மருந்து, புகை பிடித்தல், வெற்றிலை போடுதல் போன்றவைகளின் வாயிலாக அல்கலாய்டு கள் உட்கொள்ளப்படுகின்றன. இவை சிறு அளவிலேயே பயன் அளிக்கக் கூடியவை. சில அல்கலாய்டுகளைத் தொடர்ந்து உட் கொள்வதால் உடல் நலம் கெடும். குடிமநீர் வகைகளான காபி, தேனீர், ககோ (cocoa) போன்றவை, பொதுவாக, அன்றாடம் உட்கொள்ளப் படுகின்றன.

காபி, கெபியா அராபிகா (Coffea arabica) கெபியா லிபிரிக்கா (coffea liberica) போன்ற தாவரங்களின் விதைகளிலிருந்து தயாரிக் கப்படுகிறது. காபி விதைகளில் 1-2 விழுக்காடு கெபெய்ன் (caffeine) எனும் அல்காய்டு உள்ளது. டிரைகோ நெல்லைன் (Trigonelline) எனும் கெடுதி விளைவிக்கா அல்கலாய்டும் காணப்படுகிறது. காபி தாவரம் அபிசினியா நாட்டினை சார்ந்தது. வெப்ப மண்டல நாடுகளான இலங்கை, சுமத்ரா, ஜாவா, இந்தியா ஆகியவற்றில்

பயிரிடப்படுகிறது. காபியின் செயல்முறை அதனுள்ளிருக்கும் கெபெய்னின் அளவினை பொறுத்துள்ளது. இந்த அல்கலாய்டு மத்திய நரம்பு மண்டலம், சிறுநீரகங்கள், தசைகள், இதயம் ஆகியவற்றின்மீது செயல்புரிகிறது. காபி பெரும்பாலும் உணவாக பயன்படுத்தப்படுகிறது. காபியின் அல்கலாய்டு அதிக அளவில் உட்கொள்ளப்படின் கெடுதல் விளைவிக்கும். இது தூண்டு பொருளாகவும் (inul n) நரம்பு வலுவேற்றி (ervi) யாகவும் சிறுநீர் போக்கினை தூண்டும் பொருளாகவும் பயன்படுகிறது. மார்ப்பெய்ன் (morphine) செயல் முறிவிற்கு கெபெய்ன் பெரிதும் உதவுகிறது.

டீ எனப்படும் தேனீர் கேமெல்லியா சைனென்ஸிஸ் (camellia sinensis) எனப்படும், தாவரத்தின் இலைகள், இலைமொட்டுகளி லிருந்து தயாரிக்கப்படும் பானமாகும். இது புதர், செடி அல்லது மர வகையினதாகும். தேயிலை தாவரம் எனப்படும். இதன் முதல் பெயர் கிரேக்க மொழியினதாகும். இது 'தேவதை' எனும் பொருள் தருகிறது. சைனென்சிஸ்-சைகுவில் உருவானது எனும் பொருள் தருகிறது. சைனு, ஜப்பான், இந்தியா, இலங்கை, ஜாவா ஆகிய நாடுகளில் பெரும் அளவில் பயிரிடப்படுகிறது. தேயிலையின் கெபெய்ன், தியோபெல்லைன் (Theophylline) ஆகிய இரு அல்கலாய்டுகள் உள்ளன, தேயிலை சவ்வுகளைச் சுருங்கச் செய்யும் திறனுடையது (astringent) நரம்புகளை வலுவேற்றவும் வல்லது. இது தூண்டு பொருளாகவும் (stimulant) உதவுகிறது.

ககோ (cacoa) எனும் பானம் தியோபுரொமா ககோ (Theobrma cacoa) தாவரத்தின் முற்றிய விதைகளிலிருந்து தயாரிக்கப்படு கிறது. இதில் தியோபுரோமைன் என்ற அல்கலாய்டு உள்ளது. தியோபுரோமா என்பது கிரேக்க மொழியில் 'கடவுள்களின் உணவு' எனும் பொருள் தருகிறது. ககோ தசை காப்பாற்றுவி (muscle relaxant) யாக செயல்படுகிறது.

அல்கலாய்டுகள் பல்வேறு நோய்களை குணப்படுத்த பயன் படுகின்றன. கொடுமையான நோய்கள், நுண்ணிய உறுப்புகளில் செயல் ஆகியவற்றை கட்டுப்படுத்த அல்கலாய்டுகள் கொண்ட மருந்துகள் உதவுகின்றன.

மலேரியா எனப்படும் முறைக்காய்ச்சலின் கட்டுப்பாட்டிற்கு பயன்படும் கொய்னைன் (quinine) மாத்திரை சின்கோனு (cinchona) எனும் மரப்படையின் அல்கலாய்டாகும். தமிழ் நாட்டில் உதகமண்டலத்தில் இத்தாவரம் வளர்க்கப்படுகிறது.

இதன் மரப்பட்டைகளிலிருந்து கொய்னைன் போன்ற பல அல்கலாய்டுகள் பிரித்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

இயற்கையோடு இயைந்த வாழ்விலிருந்து நழுவி நவீன வசதிகளுடன் வாழ்பவர்களில் பலருக்கும் உயர்குருதி அழுத்தம் (Blood pressure) நோயுள்ளது. இவர்களுக்கு பெரிதும் பயன்படுவது ரெவோல்ஃபியா செர்பென்டைனு (Rawlofia serpentina) எனப்படும் இந்தியத் தாவரமாகும். இதன் வேரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் ரெசர்பைன் (reserpine) செர்பென்டைன் (serpentine) ஆகிய இரு அல்கலாய்டுகள் உயர்குருதி அழுத்த எதிர்ப்பு (anti hypertensive) பொருள்களாக செயல்படுகின்றன. சமதகிருத நூல்களில் 'சர்பசந்தா' என பெயரிடப்பட்டுள்ள நித்தாவசம் இந்திய மருத்துவத்தில் பெரிதும் உதவுகிறது. வேரின் அல்கலாய்டுகள் கொண்ட மருந்துகள் குருதி அழுத்தத்தினையும் நாடித்துடிப்பினையும் நாடித்துடிப்பினையும் குறைத்து உணர்வினை (euphoria) அளிக்கவல்லன.

நச்சுப் பூண்டான் பெல்லடோனு (Belladonna) எனப்படும், அட்ரோபா பெல்லடோனு (Atropa belladona) தாவரத்திலிருந்து அட்ரோப்ஃபென் (atropine) அல்கலாய்டு பிரித்தெடுக்கப்பட்டு மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இத்தாவரத்தின் வேர், இலை ஆகிய பகுதிகளிலிருந்து அல்கலாய்டுகள் பிரித்தெடுக்கப்படுகின்றன. பெல்லடோனு எனும் பெயர் இத்தாலிய மொழியிலிருந்து வந்தது. இதில பெல்லே உன்பது அழகிய என்ற பொருளினையும் டோனு என்பது அணங்கினையும் குறிக்கின்றன. இத்தாவரத்தின் கனிரசம் கண்ணின் பாவை (pupil)யினை விரிவடையச் செய்து கருத்தீர்க்கின்ற தோற்றத்தினை தரவல்லது. எனவே இப்பெயர் கொடுக்கப்பட்டது. இதன் அல்கலாய்டுகள் மத்திய நரம்பு மண்டலத்தினை தூண்ட வல்லன. உமிழ்நீர் (saliva) பால் (milk) வியர்வை போன்ற சுரப்புகளைக் குறைக்கின்றன. வயிறு, குடற்பகுதிகள் சிறு நீரகங்கள், சிறு நீர்ப்பை ஆகிய உறுப்புகளின் நோவாற்றும் மருந்தாக பயன்படுகிறது. இலைகளிலிருந்து தயாரிக்கப்பட்டவை தேய்ப்பு தைலம், மருந்து நெய், உட்கரை குளிகை (Suppositories) ஆகியவற்றில் உபயோகப்படுகின்றன.

அபினி என்றதும் பலர் முகம் சுளிப்பர். சிலர் முகம் மலர எங்கே? எங்கே? என கேட்பர். இப் பொருள் கசகசா செடியின் காய்களிலிருந்து கசியும் பால் இறுகியதால் உருவாகிறது. ஆங்கிலத்தில் ஓப்பியம் (Opium) என்பர். இத்தாவத்தின் தாவரவியல்

பெயர் பெப்வர் சோமினிம்பெரம் (Papaversomriferum). கிரேக்க மொழியில் பெபவர் கசகசா செடியின் சாறினையும் லத்தீன் மொழியில் சோமினிப்பெரம் என்பது "துயில் ஊட்டும்" பொருளினையும் குறிக்கின்றன. இத்தாவரம் இந்தியாவிற்கு 15-ம் நூற்றாண்டில் முகமதியர்களால் கொண்டு வரப்பட்டது. இன்று இந்தியா, துருக்கி, ஈரான், சைனா ஆகிய நாடுகளில் வியாபார ரீதியில் வளர்க்கப்படுகிறது,

தாவரத்தின் காய்களிலிருந்து கசியும் பால் இறுகி அபினியாகிறது. இப்பாலினை லேட்டக்ஸ் (Latex) என்பர் ஒவ்வொரு தாவரத்திலும் 5 முதல் 8 காய்கள் உருவாகலாம். இவை 4 செ.மீ. விட்டமுடையதாகும் பொழுது சுற்றிலும் கத்தியினால் கீறப்படுகிறது. இதனால் பால் வெளியேறுகிறது. பின்னர் இறுகிவிடும், இதனை அடுத்தநாள் சேகரிப்பர். இதற்குப் பின் அபினி பல வடிவங்களில் அழுத்தப்பட்டு அங்காடிக்கு செல்கிறது. இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள இத்தாவரம் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வளர்க்கப்படுகிறது.

துருக்கி அபினி அதிக விழுக்காடு அல்கலாய்டுகள் கொண்டுள்ளது. அபினியிலிருந்து 'heroine' எனும் மருந்து செய்யப்படுகிறது. இதனை அமெரிக்க இளைஞர்கள் அதிகம் பயன்படுத்தவே தடை செய்யப்பட்டது. இது மருந்துப் பழக்கத்திற்கு அடிமை ஆதலினைத் தூண்டுகிறது. அபினி மத்திய நரம்பு மண்டலத்தினை தூண்டி செயல்படுகிறது. ஆனால் இதனுடைய ஆளுகைக்குப் பின் சோர்வே ஏற்படும். மருந்து பழக்கத்திற்கு அடிமையானவர்கள் (drug addict) அபினியினைத் தவறாகப் பயன்படுத்துகையில் மருத்துவர்கள் இதனுடைய அல்கலாய்டுகளான மார்ப்பைன் (morphine) கொடெய்ன் (Codeine) நர்கொடைன் (Narcotine) போன்றவற்றை பல்வேறு மருத்துவங்களில் பயன்படுத்துகின்றனர். அபினி மருந்துகள் நோய் அகற்றவும் உணர்ச்சியின்மையினை உண்டு பண்ணுதற்கும், அறிதுயில்நிலை (hypnotic) யினைத் தோற்றுவிக்கவும் பயன்படும். இவை உணவுசாரம் உட்செல்வதற்காக உதவும் தன்னியக்க தசைகளின் அளவுக்குமீறிய இயக்கத்தினை கட்டுப்படுத்தவும் உதவுகிறது. கண்ணின் பாவையினை சுருங்க செய்யும். இதனால் அபினி பழக்கமுடையவர்கள் தோற்றம் மந்தமாக இருக்கும்.

மேற்குறிப்பிட்டவை போன்று, வெற்றிலை புகையிலை, ஊமத்தை, எட்டி போன்ற தாவரங்களிலிருந்தும் அல்கலாய்டுகள் பிரித்தெடுக்கப்பட்டுப் பல்வேறு துறைகளில் உபபோகப்படுத்தப்

சோழர் காலத்தில் வரிகள்

ப. சண்முகம், எம்.ஏ.

துணைப் பேராசிரியர் அரசினர் கலைக்கல்லூரி, சென்னை-35.

தமிழகத்தின் வரலாற்றில் சுமார் 450 ஆண்டுகள் சிறப்புற ஆட்சியை நடத்தியவர்கள் சோழர்கள். விஜயாலயன் முதலாக வந்த இந்தப் பிற்காலச் சோழர்கள் என்று அழைக்கப்பட்ட இப் பெரு மன்னர்கள் காலத்தில் தமிழகம் எத்துணையோ சிறப்புகளைப் பெற்றது. இம்மன்னர்கள் காலத்தில் வருவாய்த் (Revenue Depa. rt e) சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. வருவாய்த்துறையின் ஒரு பகுதியாக அமையும் 'வரி விதிப்பின்' முக்கிய தன்மைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

சோழர் கால வரலாற்றைத் தன்னிகரற்ற முறையில் எழுதிப் போந்த பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்.

படுகின்றன. அல்கலாய்டுகள் இருமுனையும் கூர்கொண்ட கத்தி போன்றவை இவை மருந்துகளாகவும் குடிநீர்களாகவும் மற்றும் மருந்துஅடிமை பழக்கத்தினைத்தூண்டுபவைகாகவும்பயன்படுத்தப் படுகிறன. ''அளவிற்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு'' என்பதற் கிணங்க அளவிற்கு மீறிய அல்கலாய்டுகள் உடல் நலத்தைக் கெடுக்கும். இவற்றில் பல கொடிய நச்சு தன்மையன. கிரேக்க அறிஞர் சாக்ரடீஸ்சை (socrates) சொல்லுவதற்கு எம்லாக் (Hemlock) எனப்படும் நச்சுத் தாவரத்தின் சாறும் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது. இதன் தாவரவியல் பெயர் (Conium) (maculatum) ஆகும். இது கொடிய நச்சுத் தாவரமாகும்- இதி லிருந்து எடுக்கப்படும் அல்கலாய்டுகள் நடுக்கம் அகற்றவும் துயில் ஏற்படவும் தசை களைப்பாற்றவும் பயன்படலாம்.

நச்சுப் படாதளன் செல்வத்திற்கு நச்சு மரம் பழுத்தலை குறளாசிரியர் குறிப்பாகச் சொல்கிறுர். எனவே நச்சு மரம் பழுத்தற்று எனும் பொழுது பயன்படாமையினை தெரிவிக்கிறார் ஆனால் இதுகளும் அல்கலாடுகளைப்பற்றி குறிப்பிட்டதிலிருந்து ''நச்சுமரம் பழுத்தாலும் பயன் உண்டென்பதும்'' நச்சுப்படா தவன் செல்வம் பாழ் என்பதும் பெறப்படும்.

S. தன்யகுமார் M Sc,
மாநிலக்கல்லூரி,
சென்னை-5

சோழர் கால வரி விதிப்புக் கொடுமையால் மக்கள் பல்லாற்றானும் துன்புற்றனர்[1] என்று குறிப்பிடுகிறுர். பேராசிரியர் டி.வி. மகாலிங்கம் அவர்கள், இக்கருத்தை ஏற்றுக் கொண்டு பொதுப் படையாக சோழ விஜயநகர அரசர்கள் காலத்தில் வரிக்கொடுமை யால் மக்கள் இயல்பாகவே துன்புற்றனர்[2] என்று உரைக்கிறார். சோழர் காலத்தில் வரிப்பளு நிலமற்ற ஏழை விவசாயிகள்மீது தான் (குடிமை உடையார்) திணிக்கப்பட்டது என்றும், சில சந்தர்ப்பங் களில் வன்முறைகள் தலைகாட்டின எனவும் ந. வானமாமலை கருதுகிறார்.[3] இவ்விதமான வரிக் கொடுமையைத் தாங்கமாட்டாத சோழர் காலக் குடிமக்கள் வரி கொடாப்போராட்டத்தில் ஈடுபட்ட தாக மே.து. ராசுகுமார் முடிவு கட்டுகிறுர்[4].

மேற்குறித்த கருத்துகளின் உண்மை நிலைமையினை ஆய்வதற்கு முன்பாக சோழர் காலத்தில் விதிக்கப்பட்ட வரிகளின் தன்மையைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னிந்தியாவில் சுற்றுப் பயணம் நடத்திய சௌ ஜி குவா (Chau – Ju – Ku) சோழ மண்டிலத்தில் வரிகள் எண்ணிக்கையில் மிகுந்தும், வரிப்பளுவும் மிக்கிருந்தது என்று கூறிப்போந்தார்[5]. கல்வெட்டுகளும் அதிக அளவில் வரிகளைக் குறிக்கின்றன[6]. எனவே இவ்விரண்டின் அடிப் படையில் பெரும்பாலான தென்னிந்திய வரலாற்று அறிஞர்கள், 1. அதிக வரிகள் விதிக்கப்பட்டன; 2. வரிப்பளு அதிகமிருந்துள்ளது என்று முடிவு கட்டுகின்றனர்.

வரியைக் குறிப்பிடும் சொற்றொடர்கள் (Tax terms) சுமார் 500க்கும் மேல் உள்ளன என்ற கருத்தின் அடிப்படையில் அதிகமான வரிகளை விதித்தனர் சோழர்கள் என்று கருதுவது பிழையானதாம். அதாவது ஒரு வரியைக் குறிப்பிட பல சொற்றொடர்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. இடத்திற்கு இடம், வேறுபட்ட சொற்கள் ஒரே வரிக்கு மாறுபட்டு வழக்கில் இருந்து வந்துள்ளன. எனவே 'வரி' ஒன்றாக இருப்பினும், அவை குறித்த சொற்கள் ஏராளமாக உள்ளன.

எடுத்துக்காட்டாக நில வரியை (Land Tax) எடுத்துக்கொள்ள லாம். நிலத்தின் விளைச்சலின் மீது விதிக்கப்பட்ட வரி நிலவரி ஆகும். குறிப்பிட்ட நில அளவினை ஒரு அளவாகக் (111) கொண்டு, நிலத்தின் தரத்திற்கு ஏற்றாற்போல் விதிக்கப்பட்டு வந்தது இவ்வரி. மேலும் இந்த வரி நிலத்தின் விளைச்சலுக்கு ஏற்றாற்போல் அவ்வப்போது மாறி மாறி வசூலிக்கப்பட்டு வந்துள்ளது.

நிலவரி பொதுவாக இறை[7] இறை கடமை[8], கடமை[9] என்று வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆயினும் சிறப்பாக, நிலக்கடமை[10] நிலத்தால் வந்த கடமை[11], நிலவிறை[12], புறவரி புரவாயம்[13] என்று நிலத்தோடு சேர்ததும் வழங்கப்பட்டு வந்துள்ளன. அதாவது நிலத்திலிருந்து பெறப்பட்ட வரியை மட்டுமே அவை குறித்தன. ஆனால் நன்செய் நிலத்தின் மீது விதிக்கப்பட்ட வரி நன்செய் கடமை,[14] நீர்நிலக்காசு[15] நீராரம்பம்[16] என்று வழங்கப் பட்டு வந்துள்ளன. இதேபோன்று புன்செய் நிலத்தின்மீது விதிக்கப்பட்ட வரி காட்டாரம்பம்[7], புன்செய் கடமை[18], புன் பயிர்[19] என்று வழக்கிலிருந்துள்ளது. இவை தவிர மற்ற இடங் களில் பயிராகும் பயிர்களின்துமீது விதிக்கப்பட்ட நில வரியின் பெயர் கும்மரிக்கடமை[20] வேடர்கும்மரி[21] என்று மாறுபடலாயிற்று. வரி விதிக்கப்பெறும் நிலத்தின் அளவையும் சேர்த்து வரிகளுக்கு பெயர் வழங்கலாயிற்று. காணி இறை[22], காணிப்பற்று[23], மாக்கலம்[24], மாவிறை[25], வேலிக்காசு[26], வேலிப்பயறு[27] ஆகியவைகள் முறையே காணி, மா, வேலி என்னும் நில அளவினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட நில வரியினைக் குறித்தவைகளாம். இதேபான்று விளைச்சலை அடிப்படையாகக் கொண்டும் வரிகளின் பெயர்கள் மாறுபடலாயின,, பூ வரி[8], அறுவடையின்போது பெறப்படும் நில வரியைக் குறித்ததாம் (பூ — ஒரு போக விளைச்சல்)

மேற்குறித்த சொற்றொடர்களில் சில இடத்திற்கு இடம் மாறு படுகின்றன. நிலக்கடமை, நிலத்தால் வந்த கடமை புரவாயம் ஆகிய சொற்கள் வட ஆற்காடு மாவட்டப் பகுதியில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். நிலவிறை செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பூ வரி தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வேடர் கும்மரி, கும்மரிக் கடமை ஆகிய சொற்கள் கருநாடக மாநிலத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

'நிலவரி' ஒரே வரியாக இருந்தபோதிலும், இவ்வாறு பல சொற்றொடர்கள் வழக்கிலிருந்து வந்துள்ளன. எனவே இதே போன்று மற்ற வரி குறித்த சொற்களையும் பிரித்து அறியமுடியும். எனவே ஒரு வரிக்கு பல சொற்கள் பயன்படுத்தியதால், வரி குறித்த சொற்களின் எண்ணிக்கைதான் அதிகமாயிற்றே தவிர வரிகளின் எண்ணிக்கை அதிகமாகவில்லை என்பது தெளிவு.

குறிப்புகள்

1. K.A. Nilakanta Saltri, The Colas, பக். 527, 536.
2. T. V. Mahalingam, Sonth Indian Polity, பக். 192.
3. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கு தொகுதி 2, பக். 242.
4. ஆராய்ச்சி, 13ம் இதழ், (அக். 1973) பக் 67, 78.
5. K.A. Nilakanta Sastri, Foreign Notices of South India From Megasthenes to Ma Huan, பக். 144.
6. வரிகளைக் குறிக்கும் பெயர்கள் (Tax Terms) சுமார் 500 ம் மேல் உள்ளன.
7. தென் இந்திய கல்வெட்டுகள், தொகுதி 8, எண் 572.
8. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண் 168.
9. தென் இந்திய கல்வெட்டுகள், தொகுதி 2, எண் 22
10. மேற்படி தெ.இ.க. தொகுதி 7, எண் 92.
11. தெ.இ க. தொகுதி 7, எண் 93.
12. தெ.இ.க. தொகுதி 3, எண் 103.
13. தெ.இ.க. தொகுதி 13, எண். 102
14. தெ.இ.க. தொகுதி 7, எண் 98.
15. தெ.இ.க. தொகுதி 1, எண்கள், 61;62.
16. EC, Vol IX, Nl [illegible].
17. EC' Vol X Mb. 1[illegible]7
18. தெ,இ.க, தொகுதி 17, எண் 590.
19. தெ.இ,க. தொகுதி 3, எண் 26.
20. EC, Vol IX Nl [illegible].
21. EC, Vol X, Mr. 01
22. தெ.இ.க. தொகுதி, 5, எண் 589.
23. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண் 147.
24. ARE, No 145 of 19[illegible]—4.
25. EI vol 2XXII No 34 பக். 243 254.
26. தெ.இ.க., தொகுதி 5, எண் 976.
27. தெ.இ.க., தொகுதி 1, எண் 64.
28. தெ.இ.க., தொகுதி 7, எண் 117.

திருத்தம்

அக்டோபர் இதழில் (பக் 232) வெளியான "நொய்யல் படுகையில் கல்மரம்" என்ற கட்டுரையை எழுதியவர் சு. கி. செயகரன் ஆவர். செயராமன் அல்ல.

—ஆசிரியர்.

கொங்கு - நான்காம் தொகுதி - 1974

I தொல்லியல்

அப்துல் மசீத்து. அ.	தொல்லியல் 13-18; 32-34; 84-85; 113-116, 132-134.
	உறையூர் 215-219
எழில்-மகிழ்நன், நா.	உயிரிகள் உடலைப் பாதுகாப்பது யாங்ஙனம்?
காசிநாதன், நடன	பண்டைய நில விற்பனை 191
சந்திரமூர்த்தி, மா.	குன்றக்குடி 167
	குன்னத்தூர் 265
சர்க்கார், Dr. H.	தாந்தோணி 79-83
சண்முகம், ப.	சோழர் காலத்திம் வரிகள்
சண்முக சுந்தரம், சு.	ஔவையார் நோன்பு 220-222
சிவசாமி, வி.	யாழ்ப்பாணம் 101-105
சீதரன், சீரங்கம்.	தண்ணீர்ப் பந்தல் 31
நாகசாமி, இரா.	கருவூர் 51-57
	தக்கயாகப்பரணி 155-159
பிரகதம், கொடுமுடி, ச.	வரலாற்றில் சில ஒற்றை ஏடுகள் 254-256
இராசு, செ.	நடுகல் வழிபாடு 150-154; 173-177 201-206; 227 231
	கச்சத்தீவு நழுவுகிறதா? 91-94
இலச்சுமணன், சீ.	ஆனந்தூர் 147

சோவியத் நாட்டில் குசாணர் கால ஆராய்ச்சிகள் 250
தொல்லெழுத்துவரிசை 39, 68, 207
தமிழக வரலாற்றுப் பேரவை 41
அரிக்கமேடு தொல்லெழுத்துக்கள் 178;
Coins of South India 172

II அறிவியல்

செயகரன், சு. கி,	நொய்யல் படுகையில் கல்மரம் 232
செயந்தி, பொள்ளாச்சி.	செயற்கைக் குருதி 27
செல்லப்பா, N. T.	மாலைக்கண் நோய் 119
தன்யகுமார், S.	தூதுணம் புறவு 11
	எர்காட் நோய் 58
	அங்கலாய்டுகள் 272

நடராசன், கா. மு.	புரதப் பற்றாக்குறை 136
	அறிஞர்களின் பிறப்பியல் 210
	சில விந்தை மீன்கள் 246
பெருஞ்சித்திரனார்	சிங்கைச் செலவு 121-122; 128-129
மனோகர், நா.	புதிய ஊட்டச் சத்து Q 247
	பால் ஏன் வெண்மை 249
	சிறுநீர்ப் பகுப்பாய்வு 2[illegible]4; 258
இராமசாமி, S.	அணுசக்தியும் ஆக்கப்பயன்களும் 143
	சாணத்திலிருந்து எரிவாயு 240
	செவ்வாய்க் கோளுக்கு மனிதன் பயணம் 75
	எடையிலா நிலையில் உடல் விளைவுகள் 107

III தமிழ்

அரிமாப்பாமகன், ஆ.	கணக்கில் கணம் 125
எத்திராசன், முத்து	பல்பறைத் தொழுதி 61-63;86-88; 106; 122-124; 160-161
	மயிலை 184
	ஓரை 223, 269
கார்முகில்	பூத்த கரும்பும் காய்த்த நெல்லும் 245, 271
சிவராசா, அ.	மொழிக் கோரிக்கைகளும் மொழிச்சட்டங்களும் 38
செல்வச் சந்திரன், கு.	ஈழத்தில் தமிழின் நிலை 19
கொடியன்	ஈழத்தமிழ் 45, 60, 78,

VI தமிழ் எழுத்துக்கள் பற்றி

அறிவு ஒளி, தி.நா. 67
ஆலையழகன், வல்லம் இல. 42-43
இளந்திரையன், சாலை & சாலினி 206
கொடியன் 1; 5; 15; 37; 183
கோவிந்தப்பிள்ளை 36
தில்லை நாயகம் 35
இருமொழித் தட்டச்சு விசைப்பலகை 37

V ஆய்வு மேடை

அவள், அவன் அது	க.ப. அறவாணன் 44
உரிமை வேட்கை—பொங்கல் மலர் 1974	66

கல்வெட்டு — தொல்லியல் துறை 117-120
சேலம் மாவட்டக் கோயில்கள் அ. இராசேந்திரன் 44
தென்குமரியின் புதைந்த வரலாறு
The For: othen History of the Lands End S, பத்மனாபன் 66
தாடும் ஏடும் பா. வளன் அரசு 244
மாந்தர் சிறப்பு Dr. ச. வே. சுப்பிரமணியம் 244
முதலாம் இராசேந்திரசோழன் ம. இராச சேகரத் தங்கமணி 69

VI ஆளுமையாளர்கள்

பெரியார் 5, 21
வள்ளலார் 43, 213
ஜி. ஆர். தாமோதரனர் 118
தேவநேயப் பாவாணர் 120
க.ப. அறவாணன் 135
க.த. திருநாவுக்கரசு

VII பல்வகை

உலகத் தமிழ் மாநாடு 3, 5, 7, 9, 15, 17, 31, 41
இலங்கை 6, 8, 10, 15, 17, 18, 19, 34, 38, 39
45, 60, 78, 112
சல்லிக்கட்டு 22, 42
சீதனம் 40
கலவை 64-65; 89-90; 110 - 112;; 135, 162,
179-180, 199-120
கல்வெட்டுப் பயிற்சி வகுப்பு 105
பொன்னாங்காணி 116
இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் 130
செனகல் 131
முகவை 135, 159, 208-209. 248
2500 ஆண்டுகட்கு முந்திய தொன்னகரம் 161
பித்தளைப் பட்டயம் 180
சைனரின் தமிழிலக்கண நன்கொடைகள் 256

புதிய வெளியீடுகள்

1. ஆய்வுத் தேன் ரூ. 4-00
2. மதுக்கரைப் பட்டயம் ரூ 3-00
3. பூர்வச் சக்ரவர்த்தி நாடகம்

பொங்கி மகிழ்ந்திட

உணவு உற்பத்தியில் தன்னிறைவு !

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்க இளைஞர் அணி !

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் !

குடிசைகளுக்குப் பதில் மாடி வீடுகள் !

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை நீங்கிட

கைரிக்‌ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்‌ஷாக்கள் !

இவை தமிழ்நாடு அரசின் சாதனைகளில் சில

இதேபோல்

நீங்களும் கடினமாக உழைக்கிறீர்கள் !

நிறைவாக வருவாய் பெறுகிறீர்கள் !

ஆயினும்

நாடும் வீடும் பொருளாதாரத்

தொல்லைக்கு ஆட்படுகின்றன !

காரணம் என்ன ?

நாளுக்கு நாள் பெருகிடும்

மக்கள் தொகையே இதற்குக் காரணம் !

எனவே,

செழித்திடும் நன்மைகளை

நாட்டில் நிலைத்திடச் செய்ய

நாடும் வீடும் பொங்கி மகிழ்ந்திட

அமையுங்கள் அளவான குடும்பம் !

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு

விரைவாக-

வேகமாக-

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

சேவை செய்கிறது

விரைவுக்கு அனுமன்

கம்பர் சொன்னார் :

"எண்ணுக்கும்
அளவிலாத
அறிவினோர்
இருந்து நோக்கும்
கண்ணுக்கும்-
கருதும்
தெய்வ மனத்துக்கும்
கடியன் ஆனான்"

எண்ணத்தைவிட-
அளவற்ற ஞானச செல்வர்களின் யோகக்
காட்சியைவிட-
தேவர்களின் மனத்தைவிட
வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்.

A. B. T. பார்சல் சர்வீஸ்

226, டாக்டர் நஞ்சப்பா சாலை, அஞ்சற்பெட்டி எண் 1414

கோயம்புத்தூர்-18.

ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி
ரேணுகா பிரிண்டர்ஸ், சென்னை-600020
வெளியிட்டவர் : ச. பிரகதம்
அலுவலகம் : 26, இந்திரா நகர், சென்னை-600020.